உம்முடைய வசனமே சத்தியம். யோவான் 17:17

கால தீர்க்கதரிசனத்தை புரிந்துகொள்வதற்கான திறவுகோல்கள்

பாடம் - 28

வேதாகமத்தின் மாபெரும் சத்தியங்கள்

வேதாகமத்தின் மாபெரும் சத்தியங்கள்

பாடம் : # 28

கால தீர்க்கதரிசனத்தை புரிந்துகொள்வதற்கான திறவுகோல்கள்

உங்கள் கவனத்திற்கு : ஒவ்வொரு வசனக்குறிப்பையும், தயவுசெய்து உங்கள் வேதாகமத்திலிருந்து முழுமையாக வாசித்தறியவும்.

கிறிஸ்துவுக்குள் பிரியமான சகோதர, சகோதரிகளே!

இன்று நாம் கால தீர்க்கதரிசனம் என்று அழைக்கப்படும் வேத பகுதியை குறித்து தியானிப்போம்.

"கால தீர்க்கதரிசனம்" என்றால் என்ன ?

தீர்க்கதரிசனம் என்பது வரும் காரியங்கள் மற்றும் சம்பவங்களை குறித்து அவைகள் சம்பவிப்பதற்கு முன்பாக தேவனால் வெளிப்படுத்தப்படுபவைகள் என்று நாம் அறிவோம்.

ஏசாயா 46 : 10

"அந்தத்திலுள்ளவைகளை ஆதிமுதற்கொண்டும், இன்னும் செய்யப்படாதவைகளைப் பூர்வகாலமுதற்கொண்டும் அறிவிக்கிறேன், என் ஆலோசனை நிலைநிற்கும், எனக்குச் சித்தமானவைகளையெல்லாம் செய்வேன் என்று சொல்லி,"

ஆம், **"கால தீர்க்கதரிசனமானது"....** தேவனுடைய யுகங்களை பற்றின மாபெரும் தெய்வீக திட்டத்தில், குறிப்பிட்ட **"நாள்"** மற்றும் **"கால கட்டத்தை"** வெளிப்படுத்தும் விசேஷித்த அம்சத்தை உள்ளடக்கியதாகும்.

யோபு 24 : 1

“சர்வவல்லவருக்கக் காலங்கள் மறைக்கப்படாதிருக்க, அவரை அறிந்தவர்கள் அவர் நியமித்த நாட்களை அறியாதிருக்கிறதென்ன ?”

ஆம், தேவ திட்டத்தில் முன் – குறிக்கப்பட்டு, நிர்ணயிக்கப்பட்ட நாட்கள் மற்றும் கால கட்டங்கள் உள்ளது. மேலும் **“கால தீர்க்கதரிசனத்தை”** ஆராய்வது இந்த காரியங்களை புரிந்து கொள்வதில் நமக்கு பெரிய உதவியாக இருக்கும்.

வேதத்தை ஆராய்ந்து படிப்பவர்களுக்கு “கால தீர்க்கதரிசனம்” மிக முக்கியமானதாகும்.

வேத வசனங்களில் “கால தீர்க்கதரிசனத்திற்கான” உதாரணங்கள் அநேகம் உள்ளன.

1. வெளிப்படுத்தல் 12 : 6 மற்றும் 14 மற்றும் 13 : 5

2. தானியேல் 12 : 11 மற்றும் 12

3. தானியேல் 8:14.....மற்றும் பல.

இந்த “கால தீர்க்கதரிசனங்கள்” தீர்க்கதரிசன பாஷையில் வெளிப்படுத்தப்பட்டு “தீர்க்கதரிசன” கணக்கீட்டு கொள்கைகளுக்கு உட்பட்டு இருக்கிறது.

இன்று நாம் கால தீர்க்கதரிசனங்களை திறப்பதற்கான "திறவுகோல்களில்" இரண்டினை ஆராய்ந்து அதன் மூலம் அதை புரிந்துகொள்ள இருக்கிறோம்.

இதில் முதலாவதாக நாம் பார்க்க இருப்பது தானியேல் 9:25-27 -ல் சொல்லப்பட்ட தீர்க்கதரிசனம்.

1. எழுபது வாரங்கள் பற்றின தீர்க்கதரிசனம்

நம்முடைய ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் முதலாம் வருகை மற்றும் அதை சார்ந்த விவரங்களை கொண்ட ஒரே தீர்க்கதரிசனமாக இது உள்ளது.

தானியேல் 9 : 25 - 27

"இப்பொதும் நீஅறிந்து உணர்ந்து கொள்ளவேண்டியது என்னவென்றால், எருசலேமைத் திரும்ப எடுப்பித்துக் கட்டுகிறதற்கான கட்டளை வெளிப்படுவதுமுதல், பிரபுவாகிய மேசியா வருமட்டும் ஏழு வாரமும் அறுபத்திரண்டு வாரமும் செல்லும் அவைகளில் வீதிகளும் அலங்கங்களும் மறுபடியும் கட்டப்படும். ஆனாலும், இடுக்கமான காலங்களில் இப்படியாகும். அந்த அறுபத்திரண்டு வாரங்களுக்குப் பின்பு மேசியா சங்கரிக்கப்படுவார், ஆனாலும், தமக்காக அல்ல, நகரத்தையும் பரிசுத்த ஸ்தலத்தையும் வரப்போகிற பிரபுவின் ஜனங்கள் அழித்துப்போடுவார்கள். அதின் முடிவு ஜலப்பிரவாகம்போல இருக்கும், முடிவுபரியந்தம் யுத்தமும் நாசமும் உண்டாக நியமிக்கப்பட்டது. அவர் ஒரு வாரமளவும் அநேகருக்கு உடன்படிக்கையை உறுதிப்படுத்தி, அந்த வாரம் பாதி சென்ற போது பலியையும் காணிக்கையையும் ஒழியப்பண்ணுவார், அருவருப்பான செட்டைகளோடே பாழாக்குகிறவன் வந்து இறங்குவான், நிர்ணயிக்கப்பட்டிருக்கிற நிர்மூலம் பாழாக்குகிறவன் மேல் தீருமட்டும் சொரியும் என்றான்."

இந்த வசன பகுதியில் பின் வரும் வாக்கியத்தை நாம் காண்கிறோம்....

"எருசலேமைத் திரும்ப எடுப்பித்துக் கட்டுகிறதற்கான கட்டளை வெளிப்படுவதுமுதல், பிரபுவாகிய மேசியா வருமட்டும்...."

ஏழு வாரமும் அறுபத்திரண்டு வாரங்களும் (மொத்தம் 69 வாரங்கள்) செல்லும்

“அந்த அறுபத்திரண்டு வாரங்களுக்குப் பின்பு மேசியா சங்கரிக்கப்படுவார்....” (69 வாரங்களுக்கு பின்)

“அவர் ஒரு வாரமளவும் அநேகருக்கு உடன்படிக்கையை உறுதிப்படுத்தி, அந்த வாரம் பாதி சென்ற போது பலியையும் காணிக்கையையும் ஒழியப்பண்ணுவார்...”

இவை அனைத்தும் எதை குறிக்கிறது ?

இது கர்த்தருடைய முதலாம் வருகையை குறிக்கும் ஒரே கால தீர்க்கதரிசனமாகும்.

நாம் மிக கவனமாக இந்த “கால தீர்க்கதரிசனம்” துவங்கும் இடத்தை முதலில் கவனிப்போம்.

“எருசலேமைத் திரும்ப எடுப்பித்துக் கட்டுகிறதற்கான கட்டளை வெளிப்படுவதுமுதல்.....”

சிலர் இது எருசலேமில் உள்ள ஆலயம் மீண்டும் கட்டப்பட்டதை குறிப்பதாக நினைக்கின்றனர்.

ஆனால், அது உண்மையல்ல.

ஏனென்றால், வசனம் 25ல் நாம் பின் வரும் வாக்கியத்தை வாசிக்கிறோம்

“அவைகளில் வீதிகளும் அலங்கங்களும் மறுபடியும் கட்டப்படும்....”

ஆம், அந்த கட்டளையானது எருசலேமின் “வீதிகள் மற்றும் அலங்கங்கள்” மீண்டுமாக கட்டப்படுவதை குறிக்கிறது.

2 நாளாகமம் 36 : 23

“அவருடைய ஜனங்கள் எல்லாரிலும் எவன் உங்களுக்குள் இருக்கிறானோ அவன் போகட்டும், அவனுடைய தேவனாகிய கர்த்தர் அவனோடிருப்பாராக என்று பெர்சியாவின் ராஜாவாகிய கோரேஸ் அறிவிக்கிறார் என்று, தன் ராஜ்யம் எங்கும் எழுதியனுப்பி விளம்பரம்பண்ணினான்.”

ஆம், இது பாபிலோனில் சிறைப்பட்டு போயிருந்த இஸ்ரயேலர்கள் விடுவிக்கப்பட்டு தங்களுடைய தேசத்திற்கு திரும்ப அனுமதிக்கப்பட்ட வருடமாகிய – கிமு 536 ஆகும்.

ஆனால், ஆலயத்தை எடுப்பித்து கட்டுவதற்கான இந்த கட்டளை உடனே நிறைவேற்றப்படாமல் வெகுகாலத்திற்கு பின்பு நிறைவேற்றப்பட்டது.

காணாமல்போயிருந்த அந்த கட்டளை கோரேஸ் ஆட்சிக்கு வந்த சில நாட்களுக்கு பின்பு "தோல் சுருள்களின் கருவூலத்தை" தேடிப்பார்க்கையில் கண்டுபிடிக்கப்பட்டு பின்பு அதிகாரப்பூர்வமாக வெளியிடப்பட்டதை வாசிக்கிறோம்.

எஸ்றா 6 : 1 – 3

"அப்பொழுது ராஜாவாகிய தரியு இட்ட கட்டளையின்படியே பாபிலோன் கஜானாவிலுள்ள தஸ்திர அறையைச் சோதித்தார்கள். மேதிய சீமையிலிருக்கிற அக்மேதா பட்டணத்தின் அரமனையிலே ஒரு சுருள் அகப்பட்டது, அதிலே எழுதியிருந்த விபரமாவது – ராஜாவாகிய கோரேசின் முதலாம் வருஷத்தில், கோரேஸ் ராஜா எருசலேமிலிருந்த

தேவாலயத்தைக் குறித்துப் பிறப்பித்த உத்தரவு என்னவென்றால் – தேவாலயமானது பலிசெலுத்தப்பட்டு வந்த ஸ்தானத்திலே கட்டப்படக் கடவது, அதின் அஸ்திபாரங்கள் பலமாயிருப்பதாக, அது அறுபது முழ உயரமும், அறுபது முழ அகலமுமாயிருக்கவேண்டும்."

இறுதியில், சில நாட்கள் கழித்து ஐப்பிராத்தின் குறுக்கே அதிகாரியாயிருந்த டட்னாய் மற்றும் அவருடைய உடன் அதிகாரிகளின் மூலம் கட்டப்பட்டதை வாசிக்கிறோம்.

எஸ்றா 6 ; 12, 15

"ஆகையால் இதை மாற்றவும், எருசலேமிலுள்ள தேவனுடைய ஆலயத்தைக் கெடுக்கவும், தங்கள் கையை நீட்டப்போகிற சகல ராஜாக்களையும் சகல ஜனங்களையும் தம்முடைய நாமத்தை அங்கே விளங்கப்பண்ணின தேவன் நிர்மூலமாக்கடவர், தரியுவாகிய நாம் இந்தக் கட்டளையைக் கொடுத்தோம். இதின்படி ஜாக்கிரதையாய்ச் செய்யப்படக்கடவது என்று எழுதியனுப்பினான்."

"ராஜாவாகிய தரியு அரசாளுகிற ஆறாம் வருஷம் ஆதார் என்னும் மாதம் மூன்றாந்தேதியிலே அந்த ஆலயம் கட்டி முடிந்தது."

ஆனால், வெகுகாலத்திற்கு பின்பு (கோரேஸ் மற்றும் தரியு ராஜாவுக்கு பின்பு) முக்கியமாக

"அர்தசஷ்டா ராஜாவின் இருபதாம் வருஷம் நிசான் மாதத்திலே....." (நெகேமியா 2 : 1)

எருசலேமுக்கு போவதற்கான "கட்டளையை" நெகேமியா பெற்ற பின்பு அவர் எருசலேமின் இடிந்த மதில்களை எடுப்பித்து கட்ட துவங்கினார்.

இது சம்பவத்தை குறித்து வாசிக்கையில்,

நெகேமியா 2 : 1 – 8

"அர்தசஷ்டா ராஜாவின் இருபதாம் வருஷம் நிசான் மாதத்திலே, திராட்சரசம் ராஜாவுக்கு முன்பாக வைத்திருக்கையில், நான் அதை எடுத்து அவருக்குக் கொடுத்தேன், நான் முன் ஒருபோதும் அவர் சமுகத்தில் துக்கமாயிருந்ததில்லை. அப்பொழுது ராஜா என்னைப் பார்த்து – நீ துக்கமுகமாயிருக்கிறது என்ன ? உனக்கு வியாதியில்லையே, இது மனதின் துக்கமே ஒழிய வேறொன்றும் அல்ல என்றார். அப்பொழுது நான் மிகவும் பயந்து, ராஜாவை நோக்கி – ராஜா என்றைக்கும் வாழ்க, என் பிதாக்களின்

கல்லறைகள் இருக்கும் ஸ்தலமாகிய நகரம் பாழானதும், அதின் வாசல்கள் அக்கினியால் சுட்டெரிக்கப்பட்டதுமாய்க்கிடக்கும்போது, நான் துக்கமுகத்தோடு இராதிருப்பது எப்படி என்றேன். அப்பொழுது ராஜா என்னைப் பார்த்து – நீ கேட்கிற காரியம் என்ன என்றார். அப்பொழுது நான் – பரலோகத்தின் தேவனை நோக்கி ஜெபம் பண்ணி, ராஜாவைப் பார்த்து – ராஜாவுக்குச் சித்தமாயிருந்து, அடியேனுக்கு உமது சமுகத்துக்கு நீர் என்னை அனுப்ப வேண்டிக்கொள்ளுகிறேன் என்றேன். அப்பொழுது ராஜஸ்திரீயும் பக்கத்தில் உட்கார்ந்திருந்தாள். ராஜா என்னைப் பார்த்து – உன் பிரயாணம் எத்தனைநாள்செல்லும், நீ எப்பொழுது திரும்பிவருவாய் என்று கேட்டார். இவ்வளவுகாலம் செல்லுமென்று நான் ராஜாவுக்குச் சொன்னபோது, என்னை அனுப்ப அவருக்குச் சித்தமாயிற்று. பின்னும் நான் ராஜாவைப் பார்த்து – ராஜாவுக்குச் சித்தமாயிருந்தால், நான் யூதாதேசத்துக்குப்போய்ச் சேருமட்டும், நதிக்கு அப்புறத்திலிருக்கிற தேசாதிபதிகள் என்னை வழிவிட்டனுப்பும்படிக்கு அவர்களுக்குக் கடிதங்கள் கொடுக்கும்படிக்கும், தேவாலயத்துக்கு இருக்கிற அரணின் கதவு வேலைக்கும் வேண்டிய மரங்களை ராஜாவின் வனத்துக் காவலாளனாகிய ஆசாப் எனக்குக் கொடுக்கும் படிக்கும், அவனுக்கும் ஒரு கடிதம் கட்டளையிடப்படுவதாக என்றேன், என் தேவனுடைய தயவுள்ள கரம் என்மேல் இருந்தபடியால், ராஜா அவைகளை எனக்குக் கட்டளையிட்டார்."

இங்கு, மேதோ பெர்சியா இராஜாவாகிய அர்தசாஷ்டாவினிடத்தில் நெகேமியா பானபாத்திரகாரராக இருந்து, "எப்பொழுதும் இராஜ சமூகத்தில்" இருந்ததாக நாம் வாசிக்கிறோம்.

ஒரு நாள் இராஜா நெகேமியாவின் "துக்க முகத்தை" பார்க்க நேர்ந்தது. அதை குறித்து நெகேமியாவிடம் கேட்கப்பட்ட பொழுது, அதற்கான காரணத்தை 3 ஆம் வசனத்தில் வெளிப்படுத்துகிறார்.



அவரை சந்திக்க வந்தவர்கள் மூலம் பரிசுத்த நகரமாகிய எருசலேமின் பாழடைந்த நிலையை குறித்து கேள்விப்பட்டதே அதற்கு காரணம் என்பதை நாம் வாசிக்கிறோம்.

நெகேமியா 1 : 2 – 4

“என் சகோதரரில் ஒருவனாகிய ஆனானியும், வேறே சில மனுஷரும் யூதாவிலிருந்து வந்தார்கள், அவர்களிடத்தில் நான் சிறையிருப்பில் மீந்து தப்பின யூதரின் செய்தியையும், எருசலேமின் செய்தியையும் விசாரித்தேன். அதற்கு அவர்கள் – சிறையிருப்பில் மீந்திருக்கிறவர்கள் அந்தத் தேசத்திலே மகா தீங்கையும் நிந்தையையும் அநுபவிக்கிறார்கள், எருசலேமின் அலங்கம் இடிபட்டதும், அதின் வாசல்கள் அக்கினியால் சுட்டெரிக்கப்பட்டதுமாய்க் கிடக்கிறது என்றார்கள். இந்த வார்த்தைகளைக் கேட்ட போது நான் உட்கார்ந்து அழுது, சில நாளாய்த் துக்கித்து, உபவாசித்து, மன்றாடி, பரலோகத்தின் தேவனை நோக்கி...”

இந்த சம்பவங்களை கேட்ட ராஜா நெகேமியாவிடம் அவர் வேண்டிக்கோள்ள விரும்புவது என்ன என்று கேட்டார் ?

வசனம் 2:4 – “அப்பொழுது ராஜா என்னைப் பார்த்து – நீ கேட்கிற காரியம் என்ன என்றார். அப்பொழுது நான் – பரலோகத்தின் தேவனை நோக்கி ஜெபம் பண்ணி.....”

ஆம், இந்த “சுருக்கமான ஜெபத்தை” நெகேமியா ஏறெடுத்த பின்பு, எருசலேமின் மதில்களை எடுப்பித்து கட்டுவதற்கான அனுமதியை இராஜாவிடம் வேண்டினார்.

அவருடைய வேண்டுதல் கேட்கப்பட்டு அந்த வேலைக்கு நெகேமியா எழும்புவதற்கு முன்பதாக தேவையான அனுமதி சீட்டு மற்றும் பொருட்களை ஏற்பாடு செய்தார்.

இதுவே தானியேல் 9 : 25ல் குறிப்பிடப்பட்டுள்ள கட்டளையாகும்

இது அர்தசாஷ்டா இராஜா ஆளுகைக்கு வந்த “இருபதாம் வருடத்தில்” நடந்ததை நாம் கவனிக்கலாம். அவர் ஆளுகைக்கு வந்த வருடம் **உலக சரித்திரத்தில் கிமு 474ல்** துவங்கினதாக பதிவாகியுள்ளது.

அப்படியிருக்க, “இருபதாம் வருடம்” என்பது **கிமு 454ல்** என கணக்கிடப்படுகிறது.

(கிமு வில் காலத்தை கணக்கிடுவது பின்னோக்கி செல்வதால், அங்கு கூட்டுவது என்பது உண்மையில், கழிக்கவேண்டியதாக மாறுகிறது.)

இது, இந்த “கால தீர்க்கதரிசனம்” துவங்கும் நாளாக இருக்கிறது.

இப்பொழுது மீண்டுமாக தீர்க்கதரிசனத்திற்கு திரும்புவோம்.

தானியேல் 9 : 25

“இப்போதும் நீ அறிந்து உணர்ந்து கொள்ளவேண்டியது என்னவென்றால், எருசலேமைத் திரும்ப எடுப்பித்துக் கட்டுகிறதற்கான கட்டளை வெளிப்படுவது முதல், பிரபுவாகிய மேசியா வருமட்டும் ஏழு வாரமும் அறுபத்திரண்டு வாரமும் செல்லும் அவைகளில் வீதிகளும் அலங்கங்களும் மறுபடியும் கட்டப்படும். ஆனாலும், இடுக்கமான காலங்களில் இப்படியாகும்.”

இங்கு “.....மேசியா வருமட்டும்” என்பது எதை குறிக்கும் ?

அது இயேசுவின் பிறப்பை குறிக்கிறதா ?

இங்கு **“மேசியா”** என்ற எபிரெய வார்த்தைக்கு கிரேக்க மொழியில் **“கிறிஸ்து”** எனப்படுகிறது. அதற்கு **“அபிஷேகம் பண்ணப்பட்டவர்”** என்று பொருள். இயேசு ஞானஸ்நானம் பெறும் வரை அபிஷேகம் பண்ணப்பட்டவர் அல்ல. அதுவரை யூதர்களை போல நியாயப்பிரமாணத்தின்படி பூரணமாக வாழ்ந்து 30 வயதாகும்போது ஞானஸ்நானம் பெற்றார்**(மத். 3:16).**

ஆம், நாம் வாசிக்கிறபடி இயேசு பரிசுத்த ஆவியினால் “அளவில்லாமல்” அபிஷேகிக்கப்பட்ட பொழுது (அ) ஞானஸ்நானம் பெற்ற பொழுது “மேசியாவாக” மாறினார்.**(யோவான் 3:34)**

இவ்விதமாக இந்த "காலத்தீர்க்கதரிசனத்தின்" இரண்டு முனைகளையும் நாம் கண்டுபிடித்துள்ளோம். இப்பொழுது தானியேல் 9:25 -ல் சொல்லப்பட்ட "7 வாரமும், 62 வாரமும்" என்பதை கீழ்க்கண்டவாறு கணக்கிடலாம்.



7 வாரம்	X	7 நாட்கள்	=	49 நாட்கள்	483 நாட்கள்
62 வாரம்	X	7 நாட்கள்	=	434 நாட்கள்	

இங்கு நாள் என்பது சாதாரணமாக எண்ணப்படும் 24 மணி நேரங்களை உள்ளடக்கிய நாளாக இல்லாமல், மாறாக, ஒவ்வொரு தீர்க்கதரிசன நாளும் ஒவ்வொரு வருடமாக இருக்கிறது.

ஒரு விதத்தில், இயேசுவுக்கு ஒரு நாள் என்பது நமக்கு 1000 வருடங்கள் என்பது போல இதுவும் ஆகும்.(2 பேதுரு 3:8)

அதுபோல "தீர்க்கதரிசன நாள்" என்பதற்கும் ஒரு விசேஷ கணக்கிடல் உள்ளது. இதை குறித்து வாசிக்கையில்,

எசேக்கியேல் 4 : 6

"....ஒவ்வொரு வருஷத்துக்குப் பதிலாக ஒவ்வொரு நாளை உனக்குக் கட்டளையிட்டேன்."

எண்ணாகமம் 14 : 34

"நீங்கள் தேசத்தைச் சுற்றிப்பார்த்த நாற்பதுநாள் இலக்கத்தின்படியே, ஒவ்வொரு நாள் ஒவ்வொரு வருஷமாக, நீங்கள் நாற்பது வருஷம் உங்கள் அக்கிரமங்களைச் சுமந்து, என் உடன்படிக்கைக்கு வந்த மாறுதலை உணருவீர்கள்."

பார்த்தீர்களா, ஒவ்வொரு "தீர்க்கதரிசன" நாளானது சொல்லர்த்தமான ஒரு வருடத்திற்கு சமமாக இருக்கிறது.

இவ்விதமாக, மேசியாவரையிலான 483 தீர்க்கதரிசன "நாட்களும்" சொல்லர்த்தமான 483 வருட காலத்தை கொண்டதாக வரைபடத்தில் காட்டப்பட்டிருக்கிறது.

இதை கொண்டு இயேசுவின் "ஞானஸ்நான நாளை" பின் வருமாறு கணக்கிடுகிறோம்.

483	—	கி.மு 454	→	கி.பி 29
"மேசியா வருமட்டும்" சொல்லர்த்தமான 69 வாரங்களின் கணக்கிடல்		**தீர்க்கதரிசனம் துவங்கும் வருடம்**		

இவ்விதமாக, தீர்க்கதரிசனத்தின் "69 வார" காலமானது கிமு 454 -ல் துவங்கி இயேசுவின் ஞானஸ்நானவருடம் – "மேசியா வருமட்டும்" – கிபி 29 வரை நீடிக்கிறது.

இப்பொழுது தீர்க்கதரிசனத்தின் கடைசி வாரம் அல்லது **“70 ஆவது வாரம்”** குறித்து நாம் வாசிக்கையில்,

தானியேல் 9 : 27

“அவர் ஒரு வாரமளவும் அநேகருக்கு உடன்படிக்கையை உறுதிப்படுத்தி, அந்த வாரம் பாதி சென்றபோது பலியையும் காணிக்கையையும் ஒழியப்பண்ணுவார், அருவருப்பான செட்டைகளோடே பாழாக்குகிறவன் வந்து இறங்குவான், நிர்ணயிக்கப்பட்டிருக்கிற நிர்மூலம் பாழாக்குகிறவன் மேல் தீருமட்டும் சொரியும் என்றான்.”

இது எதை குறிக்கும் ?

இது இயேசு தம்மை **“உலகத்தின் பாவங்களை சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டியாக”** – **யோவான் 1 : 29** ஒப்புக்கொடுத்ததை குறிக்கும்.

இது கல்வாரியில் அனைவருக்காக கொடுக்கப்பட்ட ஈடு பலியாகும் – **(1தீமோத்தேயு 2 : 6)**

இது பாவங்களுக்கான உண்மையான பலியாக இருந்து, இது நிறைவேற்றப்பட்ட பின்பு யூதர்கள் ஏறெடுத்த நிழலான “பலிகள்” மற்றும் “காணிக்கைகளை” தேவன் அங்கீகரிப்பது முடிவுக்கு வந்தது என்று வாசிக்கிறோம்.

எபிரெயர் 10 : 11, 12 - “அன்றியும், எந்த ஆசாரியனும் நாடோறும் ஆராதனை செய்கிறவனாயும் பாவங்களை ஒருக்காலும் நிவிர்த்திசெய்யக்கூடாத ஒரேவித பலிகளை அநேகந்தரம் செலுத்திவருகிறவனாயும் நிற்பான். இவரோ, பாவங்களுக்காக ஒரே பலியைச் செலுத்தி, என்றென்றைக்கும் தேவனுடைய வலதுபாரிசத்தில் உட்கார்ந்து.....”

(யூதர்களுடைய இந்த நிழலான பலிகளை குறித்து வரப்போகிற 32 – “பாவ நிவாரண பலிகள்” என்ற பாடத்தில் தெளிவாக காண்போம்)

முழு வேதாகமத்திலும் (தானியேல் 9 : 27) இந்த வசனபகுதி மாத்திரமே யோர்தான் துவங்கி கல்லவாரி வரையிலான இயேசுவின் ஊழியகாலத்தின் அளவை காண்பிக்கிறது.

“....அந்த வாரம் பாதி சென்ற பிறகு....”

ஆம், இது 3½ தீர்க்கதரிசன “நாட்களை” அல்லது 3½ சொல்லர்த்தமான வருடங்களை குறிக்கும்.

இதன் மூலம் இயேசு மரித்த வருடம் பின் வருமாறு கணக்கிடப்படுகிறது

கிபி 29 + 3½ = 33 கிபி



ஆம், உண்மையில் இயேசு கிபி 33, ஏப்ரல் 3, வெள்ளி அன்று மரித்தார்.

அவர் மரிக்கையில் 33½ வயதுள்ளவராயிருந்தார்.

இப்படியிருக்க இயேசு பிறந்த நாள் எது ?

அதை மிக எளிதில் கணக்கிடலாம்

இயேசுகிறிஸ்து **கிபி 33, ஏப்ரல் மாதம் வெள்ளிக்கிழமை சிலுவையில் அறையப்பட்டார்** என்பதற்கு தெளிவான ஆணித்தனமான ஆதாரம் உண்டு என்பதை மேலே பார்த்தோம்.

மேலும் அவர் 30 வது வயதில் ஞானஸ்நானம் பெற்று 33½ வருடம் ஊழியம் செய்தார் என்றும் அறிந்திருக்கிறோம்.

எனவே அவர் சங்கரிக்கப்பட்ட கிபி 33 ஏப்ரல் மாதத்திலிருந்து 33 வருடம் 6 மாதம் பின்னோக்கி செல்லும்போது கிடைக்கும் வருடமும் மாதமுமே இயேசுகிறிஸ்து பிறந்த நாள் காணும் வழியாக இருக்கிறது.

கிபி 33 ஏப்ரல் மாதத்திலிருந்து 3½ வருடம் பின்னோக்கி செல்லும்போது அவர் ஞானஸ்நானம் பெற்ற நாளாக கிபி 29, அக்டோபரும், அதிலிருந்து 30 வருடம் பின்னோக்கி செல்லும்போது அவர் பிறந்த வருடமும் கிடைக்கிறது.

இதை பின்வரும் அட்டவணை மூலம் அறியலாம்.

இதிலிருந்து நமது ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து கிமு 2 ஆம் வருடம் அக்டோபர் மாதம் பிறந்தார் என அறியலாம்.

(குறிப்பு: வலது புறத்திலிருந்து இடப்பக்கமாக பார்க்கவும்)



"....அப்பொழுது அந்த நாட்டிலே மேய்ப்பர்கள் வயல்வெளியில் தங்கி, இராத்திரியிலே தங்கள் மந்தையைக் காத்துக்கொண்டிருந்தார்கள்." (லூக்கா 2 : 8)

டிசம்பர் மாதத்தில் பெத்லேகேமில் பனி காலமாகயிருப்பதினால் ஆட்டு இடையர்கள் வெளியே தங்குவது இயலாததாகும்.

எனவே அவரது பிறப்பு அக்டோபர் மாதம் நிகழ்ந்ததை இது மேலும் உறுதிப்படுத்துகிறது.

இப்படியிருக்க, டிசம்பர் 25 ஆம் தேதியில் கொண்டாடப்படும் கிறிஸ்துமஸ் குறித்த காரியம் என்ன ?

உண்மையில், அதற்கும் இயேசுவின் பிறப்பு அல்லது வேத வசனத்திற்கும் எந்த தொடர்பும் கிடையாது.

ஆகையால் "இந்த தீர்க்கதரிசனத்தின் கடைசி வாரம்" அல்லது "70 ஆவது வாரம்" பின் வரும் நாட்களை குறிக்கிறது.

இயேசுவின் ஞானஸ்நானம் → **கிபி 29**

இயேசுவின் மரணம் அல்லது **இயேசு "சங்ககரிக்கப்படுவார்"** → **கிபி 33**

யூதர்களுக்கான பரம அழைப்பின் வாய்ப்பு முடிவுக்கு வருதல் – புறஜாதிகளுக்கு பரம அழைப்பின் வாய்ப்பு சென்றடைதல்

(கொர்நெலியுவின் வீட்டில் – அப்போஸ்தலர் 10 : 1 – 6) → **கிபி 33**

வசனங்களில் இயேசு பிறக்கபோகும் இடம் முதற்கொண்டு குறிப்பிடப்பட்டிருப்பதை நாம் வாசிக்கிறோம்.

மீகா 5 : 2

"எப்பிராத்தா என்னப்பட்ட பெத்லகேமே, நீ யூதேயாவிலுள்ள ஆயிரங்களுக்குள்ளே சிறியதாயிருந்தும், இஸ்ரயேலை ஆளப்போகிறவர் உன்னிடத்திலிருந்து புறப்பட்டு என்னிடத்தில் வருவார், அவருடைய புறப்படுதல் அநாதிநாட்களாகிய பூர்வத்தினுடையது."

ஆம், இந்த தீர்க்கதரிசனம் நிறைவேறுவதற்காக கலிலேயாவிலுள்ள நாசரேத்தை சொந்த ஊராக கொண்ட மரியாள் மற்றும் யோசேப்பு மிக தொலைவில் உள்ள யூதேயாவின் பெத்லகேமுக்கு பயணமாக செல்வது அவசியமாயிற்று.
(லூக்கா 2 : 1 – 6)

லூக்கா 2 : 1 & 4,5

"அந்நாட்களில் உலகமெங்கும் குடிமதிப்பு எழுதப்படவேண்டுமென்று அகஸ்துராயனால் கட்டளை பிறந்தது. அப்பொழுது யோசேப்பும், தான் தாவீதின் வம்சத்தானும் குடும்பத்தானுமாயிருந்தபடியினாலே, தனக்கு மனைவியாக நியமிக்கப்பட்டுக் கர்ப்பவதியான மரியாளுடனே குடிமதிப்பெழுதப்படும்படி, கலிலேயா நாட்டிலுள்ள நாசரேத்தூரிலிருந்து யூதேயா நாட்டிலுள்ள பெத்லகேம் என்னும் தாவீதின் ஊருக்குப்போனான்."

இது மரியாளின் கர்ப்பகால முடிவில் சம்பவித்தது. இப்பொழுது, இந்த தீர்க்கதரிசனத்தின் நிறைவேறுதலை குறித்து வாசிக்கையில்,

தானியேல் 9 : 27

"அவர் ஒரு வாரமளவும் அநேகருக்கு உடன்படிக்கையை உறுதிப்படுத்தி, அந்த வாரம் பாதி சென்ற போது பலியையும் காணிக்கையையும் ஒழியப்பண்ணுவார், அருவருப்பான செட்டைகளோடே பாழாக்குகிறவன் வந்து இறங்குவான், நிர்ணயிக்கப்பட்டிருக்கிற நிர்மூலம் பாழாக்குகிறவன் மேல் தீருமட்டும்

இந்த வசனமானது, அந்தி கிறிஸ்து வரும்பொழுது சம்பவிப்பதாக நம்பப்படும் "ஏழு வருட உபத்திரவ காலத்திற்கு" ஆதாரமாக எண்ணப்படுகிறது.

ஆனால், **NIV** மற்றும் தமிழ் மொழி பெயர்ப்பில் இவ்வசனம் தவறாக கொடுக்கப்பட்டுள்ளது. இதன் சரியான மொழி பெயர்ப்பு **KJV** மொழி பெயர்ப்பில் பின் வருமாறு காணப்படுகிறது.

Daniel 9 : 27 - "And for the overspreading of abominations he (**அவர்**) shall make it (**அதை**) desolate, even until the consummation and that determined shall be poured upon he desolate."

இதை தமிழில் பின் வருமாறு மொழிபெயர்க்கப்பட வேண்டும்.

"அவர் ஒரு வாரமளவும் அநேகருக்கு உடன்படிக்கையை உறுதிப்படுத்தி, அந்த வாரம் பாதி சென்ற போது பலியையும் காணிக்கையையும் ஒழியப்பண்ணுவார், அருவருப்பான செட்டைகளோடே பாழாக்குதல் வந்து இறங்கும், நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது நிர்மூலம் தீருமட்டும் அதை பாழாக்குவார் என்றான்."

ஆனால், இந்த வசனத்திற்கான உண்மை விளக்கம் பின்வருமாறு உணரப்படவேண்டும்.

"பாழாக்குதல்"

இது இயேசு அறிவித்த பிரகாரம் இஸ்ரயேல் தேசம் பாழாக்கப்படுவதை குறிக்கிறது.

மத்தேயு 23 : 38 - "இதோ, உங்கள் வீடு உங்களுக்குப் பாழாக்கிவிடப்படும்."

ஆம், "அவர்" (இயேசு) "அதை" (இஸ்ரயேல் தேசம்) பாழாக்குவார்.

இதற்கான காரணம் என்ன ?

ஆம், இஸ்ரயேலின் துன்மார்க்கமானது அவர்களுடைய **மேசியாவை புறக்கணித்தது** மற்றும்....

லூக்கா 13 : 6 – 9 -ல் குறிப்பிடப்பட்டுள்ள அவர்களுடைய கனியற்ற நிலையின் மூலம் வெளிப்பட்டது.

அது எவ்விதமாக பாழாக்கப்பட்டது என்று பின்வரும் வசனத்தில் விளக்கப்படுகிறது.

தானியேல் 9 : 26

"அந்த அறுபத்திரண்டு வாரங்களுக்குப் பின்பு மேசியா சங்கரிக்கப்படுவார். ஆனாலும், தமக்காக அல்ல, நகரத்தையும் பரிசுத்த ஸ்தலத்தையும் வரப்போகிற பிரபுவின் ஜனங்கள் அழித்துப்போடுவார்கள். அதின் முடிவு ஜலப்பிரவாகம்போல இருக்கும், முடிவுபரியந்தம் யுத்தமும் நாசமும் உண்டாக நியமிக்கப்பட்டது."

இது எதை குறிக்கிறது ?

இது **"நகரமாகிய"**

எருசலேம் மற்றும் **"பரிசுத்த ஸ்தலமாகிய" – ஆலயம் கிபி 69-70** ஆம் வருடம் அழிக்கப்படுவதை குறித்த தீர்க்கதரிசனமாகும்.

இந்த வசன பகுதி குறித்த விளக்கத்தை இப்பொழுது நாம் காண்போம்.

"பிரபு" → **இங்கு ரோம அதிகாரியான தீத்து ராயனை குறிக்கும்.**

"வரப்போகிற பிரபுவின் ஜனங்கள்" → **இது ரோம படையை குறிக்கும்.**

“ஜலப்பிரவாகம்” என்பது மாபெரும் சீரழிவு மற்றும் யுத்தத்தின் முற்றுகை மற்றும் வன்முறையை குறிக்கும்.

இஸ்ரயேலுக்கான இந்த தண்டனை எவ்வளவாக அல்லது எதுவரைக்கும் நீடிக்கும் ?

இதற்கான பதிலை நாம் வாசிக்கலாம்,

தானியேல் 9 : 27

“அவர் ஒரு வாரமளவும் அநேகருக்கு உடன்படிக்கையை உறுதிப்படுத்தி, அந்த வாரம் பாதி சென்ற போது பலியையும் காணிக்கையையும் ஒழியப்பண்ணுவார், அருவருப்பான செட்டைகளோடே பாழாக்குகிறவன் வந்து இறங்குவான், நிர்ணயிக்கப்பட்டிருக்கிற நிர்மூலம் பாழாக்குகிறவன் மேல் தீருமட்டும் சொரியும் என்றான்.”

ஆம், இந்த தண்டனைக்கு ஒரு “நிர்ணயிக்கப்பட்ட” கால அளவு உள்ளது.

இதை குறித்து பின் வரும் வசனத்திலும் வாசிக்கிறோம்.

எரேமியா 16 : 18

“முதலாவது நான் அவர்களுடைய அக்கிரமத்துக்கும், அவர்களுடைய பாவத்துக்கும் இரட்டிப்பாய் நீதியைச் சரிக்கட்டுவேன், அவர்கள் என் தேசத்தைத் தீட்டுப்படுத்தி, என் சுதந்தரத்தைச் சீயென்று அருவருக்கப்படத்தக்க தங்கள் காரியங்களின் நாற்றமான விக்கிரகங்களினாலே நிரப்பினார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்.”

ஆம், அந்த தண்டனை “இரண்டத்தனையாக” உள்ளது.

இந்த தண்டனையின் காலமானது இஸ்ரயேல் தேசமானது யாக்கோபின் மரணம் துவங்கி இயேசுவின் வருகை மட்டும் பெற்ற ஆசீர்வாத காலத்தின் வருட எண்ணிக்கைக்கு சரி நிகரான காலமாக இருக்கும் என்பதை குறிக்கிறது. இந்த கால பகுதியின் சரியான கணக்கீட்டை வரப்போகும் வகுப்புகளில் நாம் காண்போம்.

இவ்விதமாக, கால தீர்க்கதரிசனங்களை புரிந்து கொள்வதற்கான முக்கியமான திறவுகோல்கள் சிலவற்றை இந்த கால தீர்க்கதரிசனத்தில் நாம் அறிந்து கொண்டோம்.

திறவுகோல் – 1

வேதத்தின் கால தீர்க்கதரிசன கணக்கீடுகள் சில கணக்கீட்டு கொள்கைகளை பெற்றுள்ளது

திறவுகோல் – 2

ஒவ்வொரு “தீர்க்கதரிசன நாள்” என்பது ஒரு வருடத்திற்கு இணையாக உள்ளது.

இப்பொழுது நாம் காலதீர்க்கதரிசனங்களை புரிந்து கொள்ளுவதற்கான மற்ற திறவு கோல்களை நம்முடைய இரண்டாவது “கால தீர்க்கதரிசனம்” பற்றின இன்றைய ஆராய்ச்சியில் காண்போம்.

2. புறஜாதியாரின் காலங்கள்

இது நம்முடைய ஆண்டவர் மூலம் குறிப்பிடப்படுகிற ஒரு “கால தீர்க்கதரிசனமாகும்”.

லூக்கா 21 : 24

“பட்டய கருக்கினாலே விழுவார்கள், சகல புறஜாதிகளுக்குள்ளும் சிறைப்பட்டுபோவார்கள். புறஜாதியாரின் காலம் நிறைவேறும் வரைக்கும் எருசலேம் புறஜாதியாரால் மிதிக்கப்படும்.”

இந்த தீர்க்கதரிசன காலமானது – **“புறஜாதிகளின் காலங்கள்”** என்று அழைக்கப்படுகிறது.

இடைப்பட்ட காலத்தில் எருசலேம் (இங்கு இஸ்ரயேலை அடையாளப்படுத்துகிறது – மத்தேயு 23 : 37) தீர்க்கதரிசனம் நிறைவேறும் வரைக்கும் புறஜாதியாரால் “மிதிக்கப்படும்”

அல்லது ஆளுகை செய்யப்படும் என்று நாம் வாசிக்கிறோம்.

"புறஜாதியாரின் காலங்கள்" என்ற இந்த தீர்க்கதரிசன காலம் எதை குறிக்கிறது ? மற்றும்
இந்த தீர்க்கதரிசனம் குறிக்கும் காலத்தின் அளவு அல்லது நாட்கள் எவை ?
என்பதை இப்பொழுது பார்க்கலாம்.

இங்கு, "காலங்கள்" என்ற வார்த்தையானது

➡ "KAIROS" **(ஸ்டராங்ஸ் அகராதி - 2540)**

என்ற கிரேக்க வார்த்தையிலிருந்து மொழி பெயர்க்கப்படுகிறது.

இது **"ஏற்படுத்துதல்"** அல்லது **"சரியான காலம்"** அல்லது **"சிறிது காலம்"** - எனும் கால அளவை பொருளாக கொண்டுள்ளது.

இஸ்ரயேல் தேசத்தை அல்லது "எருசலேமை" ஆண்டுக்கொள்கிற அல்லது "மிதிக்கிற" இந்த "புறஜாதியாரின் காலங்களுக்கு"

➡ ஒரு துவக்கம் மற்றும் முடிவு இருக்கவேண்டும்.

அது எப்பொழுது ? நாம் காண்போம்......

தேவன் தம்முடைய நிழலான இராஜ்யத்தை இஸ்ரயேலில் சில காலங்கள் ஸ்தாபித்திருந்ததை நாம் காண்கிறோம். இதை பின் வரும் வசனத்தில் வாசிக்கிறோம்.

1 நாளாகமம் 29 : 23

"அப்படியே சாலொமோன் தன் தகப்பனாகிய தாவீதின் ஸ்தானத்திலே கர்த்தருடைய சிங்காசனத்தில் இராஜாவாய் வீற்றிருந்து பாக்கியசாலியாயிருந்தான்."

ஆம், இவ்விதமாக இஸ்ரயேலின் இராஜாக்கள் மற்றும் சாலொமோன் இராஜாவுக்கு பின் வந்த யூதா தேசத்தின் இராஜாக்களும் கர்த்தருடைய நிழலான இராஜ்யத்தின் சிங்காசனத்தின் மேல் சில காலம் அமர்ந்து, யூதாவின் கடைசி இராஜாவும் துன்மார்க்கனுமான – சிதேக்கியா வரையில் அரசாண்டனர். இவரை குறித்து வாசிக்கையில்,

எசேக்கியேல் 21 : 25 - 27

"இஸ்ரயேலை ஆளுகிற அவபக்தியுள்ள துன்மார்க்க அதிபதியே, அக்கிரமத்திற்கு முடிவு வரும் காலத்தில் உன் நாள் வந்தது. பாகையை கழற்று. கிரீடத்தை எடுத்து போடு, அது இனி முன் போலிராது. தாழ்ந்தவனை உயர்த்தி, உயர்ந்தவனை தாழ்த்துவேன். அதை கவிழ்ப்பேன், கவிழ்பபேன், கவிழ்பபேன். உரிமைக்காரனானவர் வருமட்டும் அது இல்லாதிருக்கும். அவருக்கே அதை கொடுப்பேன் என்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார்."

இங்கு "அவர்" என்பது மேசியாவை குறிக்கும்.

ஆம் வரப்போகிற தேவனுடைய நிஜமான ராஜ்யத்தின் அதிகாரம் மற்றும் ஆளுகையை இயேசு பெற்று கொள்வார் என்று நாம் வாசிக்கிறோம்.

தானியேல் 7 : 13

"இராத்தரிசனங்களிலே நான் பார்த்துக்கொண்டிருக்கையில், இதோ, மனுஷகுமாரனுட்டைய சாயலான ஒருவர் வானத்து மேகங்களுடனே வந்தார், அவர் நீண்ட ஆயுசுள்ளவர் இடமட்டும் வந்து, அவர் சமீபத்தில் கொண்டுவரப்பட்டார்."

ஆனால், இடைப்பட்ட காலத்தில் இஸ்ரயேல் தேசமானது "புறஜாதிகளிடத்தில்" "மிதிக்கப்படுவதற்காக" ஒப்புகொடுக்கப்படும்.

ஆம், புறஜாதிகள் அல்லது யூதர் அல்லாத இராஜ்யங்களுக்கு இஸ்ரயேலை ஆண்டு கொள்ளும் அதிகாரம் கொடுக்கப்படும்.

ஆனால் நம்முடைய கேள்வி என்ன வென்றால், ஏன் இஸ்ரயேல் மிதிக்கப்பட வேண்டும் ? இது எவ்வளவு நாள் நீடிக்கும் ?

தேவன் தம்முடைய தூதர்களின் மூலம் இஸ்ரயேல் தேசத்தை அவர்களுடைய நடத்தையினிமித்தம் எச்சரித்தார். ஆனால் அந்த எச்சரிப்புகளுக்கு அவர்கள் தரப்பில் காண்பிக்கப்பட்ட செயலை குறித்து வாசிக்கையில்

2 நாளாகமம் 36 : 16

"ஆனாலும் அவர்கள் தேவனுடைய ஸ்தானாதிபதிகளைப் பரியாசம்பண்ணி, அவருடைய வார்த்தைகளை அசட்டைசெய்து, அவருடைய தீர்க்கதரிசிகளை நிந்தித்தபடியால், கர்த்தருடைய உக்கிரம் அவருடைய ஜனத்தின்மேல் மூண்டது, சகாயமில்லாமல் போயிற்று."

ஆம், இவ்விதமாக இஸ்ரயேலின் மீதான இறுதி தண்டனை பதிவு செய்யப்பட்டுள்ள வசனங்களை நாம் வாசிக்கையில்,

லேவியராகமம் 26 : 18

"இவ்விதமாய் நான் உங்களுக்குச் செய்தும், இன்னும் நீங்கள் எனக்குச் செவிகொடாதிருந்தால், உங்கள் பாவங்களினிமித்தம் பின்னும் ஏழத்தனையாக உங்களைத் தண்டித்து,..."

லேவியராகமம் 26 : 21

"நீங்கள் எனக்குச் செவிகொடுக்கமனதில்லாமல், எனக்கு எதிர்த்து நடப்பீர்களானால், நான் உங்கள் பாவங்களுக்குத்தக்கதாக இன்னும் ஏழத்தனை வாதையை உங்கள்மேல் வரப்பண்ணி,"

லேவியராகமம் 26 : 24

"நான் உங்களுக்கு எதிர்த்து நடந்து, உங்கள் பாவங்களினிமித்தம் ஏழத்தனையாக வாதித்து."

லேவியராகமம் 26 : 28

“நானும் உக்கிரத்தோடே உங்களுக்கு எதிர்த்து நடந்து, நானே உங்கள் பாவங்களினிமித்தம் உங்களை ஏழத்தனையாய்த் தண்டிப்பேன்.”

இப்பொழுது இங்கு காணப்படுகிற “ஏழத்தனை” என்பது எதை குறிக்கும் ?

இது – “Paamah (பாமா)” **(ஸ்டராங்ஸ் அகராதி 6471)** என்ற எபிரெய பதத்திலிருந்து வருகிறது.

இது – **“ஒரு அடி** (a stroke)” அல்லது **“மடங்கு** அல்லது **காலம்** (time)” என ஏழு மடங்கு தண்டிப்பது போன்ற பொருளை தருகிறது.

இஸ்ரயேலுக்கு, “ஏழத்தனையான” தண்டனை நான்கு முறை சொல்லப்பட்டிருப்பதை சற்று கவனிக்கவும்.

இந்த “ஏழத்தனையான” தண்டனை இஸ்ரயேலுக்கு எவ்விதத்தில் பொருந்துகிறது ?

ஒரு குழந்தையை பிரம்பு கொண்டு தண்டிப்பது போல, இஸ்ரயேலை சொல்லர்த்தமாக “ஏழு மடங்கு (அ) காலம் தண்டிப்பது எப்படி சாத்தியமாகும் ?

லூக்கா 21 : 24 -ல் இயேசு எருசலேம் புறஜாதியார் மூலம் புறஜாதிகளின் காலங்கள் நிறைவேறும் வரை “மிதிக்கப்படுவதை” குறித்து பேசுகையில் இதற்கான பதிலை கூறியிருப்பதை காணலாம்.

லூக்கா 21 : 24

“பட்டயக்கருக்கினாலே விழுவார்கள், சகல புறஜாதிகளுக்குள்ளும் சிறைப்பட்டுப்போவார்கள், புறஜாதியாரின் காலம் நிறைவேறும்வரைக்கும் எருசலேம் புறஜாதியாரால் மிதிக்கப்படும்.”

இந்த தண்டனையானது ஒரு குறிப்பிட்ட கால அளவுக்குரியதாக அவர் கூறுகிறார்.

ஆம், “ஏழத்தனையாக” – புறஜாதி தேசங்களுக்குள் அதுவும் புறஜாதியாரின் கைகளில் ஒப்புக்கொடுத்தது, தேவன் இஸ்ரயேலுக்கு கொடுத்த இறுதியான தண்டனையாகும்.

இவ்விதமாக, இது சொல்லர்த்தமாக ஏழு முறை அடிப்பதை குறிக்காமல், "ஏழத்தனை" என்பதற்கு ஒரு அழமான பொருள் இருப்பதை காண்கிறோம்.

இது ஒரு "கால தீர்க்கதரிசனம்" ஆகும்.

மேலும், இந்த "மடங்கு (அ) காலம்" என்பது தீர்க்கதரிசன பாஷையில் பின்வருமாறு சொல்லப்பட்டிருப்பதை புரிந்து கொள்ள வேண்டும்.

வெளிப்படுத்தல் 12 : 14

"ஸ்திரீயானவள் அந்தப் பாம்பின் முகத்திற்கு விலகி, ஒரு காலமும், காலங்களும், அரைக்காலமுமாகப் போஷிக்கப்படத்தக்கதாய் வனாந்தரத்திலுள்ள தன் இடத்திற்குப் பறந்து போகும்படி பெருங்கழுகின் இரண்டு சிறகுகள் அவளுக்குக் கொடுக்கப்பட்டது."

இங்கு இந்த "காலத் தீர்க்கதரிசனம்"

1 + 2 + ½

காலங்கள் குறித்து பேசுகிறது. இது மொத்தமாக **3½** "காலங்கள்" ஆகும்.

இது எதை குறிக்கும் ?

இந்த வசனத்தின் ஆழமான விளக்கம் வரப்போகும் வகுப்புகளில் நாம் காண இருக்கிறோம். ஆனால் இந்த **3½** "காலங்களுக்கு" உரிய விளக்கம் இதே அதிகாரத்தில் காணப்படுகிறது.

வெளிப்படுத்தல் 12 : 6

"ஸ்திரீயானவள் வனாந்தரத்திற்கு ஓடிப்போனாள், அங்கே ஆயிரத்திருநூற்றறுபது நாளளவும் அவளைப் போஷிப்பதற்காக தேவனால் ஆயத்தமாக்கப்பட்ட இடம் அவளுக்கு உண்டாயிருந்தது."

பார்த்தீர்களா ! 14 மற்றும் 16ஆம் வசனமாகிய இவ்விரண்டும் ஒரே காரியத்தை குறிக்கின்றன.

ஆனால், ஒரே கால அளவை வேறுபட்ட விதத்தில் வெளிப்படுத்துகின்றன.

3½ காலம் = 1260 நாட்கள்.

மேலும், இதே தீர்க்கதரிசன காலம் மறுபடியும் குறிப்பிடப்பட்டுள்ளதை பின்வரும் வசனத்தில் வாசிக்கிறோம்.

வெளிப்படுத்தல் 13 : 5

"பெருமையானவைகளையும் தூஷணங்களையும் பேசும் வாய் அதற்குக் கொடுக்கப்பட்டது, அல்லாமலும் நாற்பத்திரண்டு மாதம் யுத்தம்பண்ண அதற்கு அதிகாரங் கொடுக்கப்பட்டது."

இங்கு குறிப்பிடப்பட்டுள்ள **"நாற்பத்தி இரண்டு"** மாதங்களும்கூட கீழே கணக்கிடப்பட்டுள்ளபடி **3½** வருடங்களுக்கு சமமாகும்.

$$12 + 12 + 12 + 6 = 42$$ **மாதங்கள்**

இதன் மூலம் "தீர்க்கதரிசன பாஷையில்" ஒரு காலம் (அ) மடங்கு என்பது ஒரு வருடம் என்று நாம் புரிந்து கொள்கிறோம்.

ஆனால், இது **365¼** நாட்களை கொண்ட சூரிய வருடமாக நாம் புரிந்துகொள்ளக்கூடாது.

தீர்க்கதரிசன பாஷையில் ஒரு வருடம் என்பது பின் வருமாறு கணக்கிடப்படுகிறது.

ஒரு மாதத்தில் உள்ள நாட்களைக் கணக்கிட **(ஒரே கால அளவை வெவ்வேறு விதமாக மேலே குறிப்பிட்ட மூன்று வசனங்களிலிருந்து)** நாம் 1260 நாட்களடங்கிய கால அளவை 42 மாதத்தினால் வகுக்க வேண்டும்.

$$\frac{1260}{42} = 30$$ **நாட்கள்**

ஆம், ஒவ்வொரு "தீர்க்கதரிசன" மாதமும் 30 நாட்களை உடையதாக கணக்கிடப்படுகிறது.

இதன் மூலம் ஒரு வருடம் என்பது பின்வருமாறு கணக்கிடப்படுகிறது

$$30 \times 12 = 360$$ **நாட்கள்**

ஆம், ஒரு "காலம்" அல்லது தீர்க்கதரிசன வருடம் என்பது 360 "நாட்களுக்கு" சமமாகும்.

இவ்விதமாக, இந்த தீர்க்கதரிசனத்தில் **"ஏழு காலம்"** அல்லது **"மடங்கு"** என்பது

360 X 7 = 2520 "நாட்கள்" ஆகும்.

ஆகையால், இந்த தீர்க்கதரிசனம் **2520 "தீர்க்கதரிசன நாட்கள்"** நீடிக்கக்கூடியதாக இருக்கிறது.

இந்த நாட்கள் அனைத்தும் 24 மணி நேரம் கொண்ட சொல்லர்த்தமான கால அளவு அல்ல என்பதை நாம் ஏற்கனவே பார்த்திருக்கிறபடியால் **"ஒவ்வொரு வருஷத்திற்கு பதிலாக ஒவ்வொரு நாள்...."** என கணக்கிடுகிறோம்.

ஆகையால், 2520 "தீர்க்கதரிசன நாட்கள்" = 2520 வருடங்கள் ஆகும்.

இந்த 2520 நாட்கள் என்ற சொல்லர்த்த வருடங்கள் அல்லது "ஏழு காலங்கள் (அ) மடங்கு" தேவன் இஸ்ரயேல் மீது அனுமதித்த புறஜாதியாரின் ஆளுகைக்குரிய காலம் என்றும், அது பின்வருமாறு துவங்கினதையும் வாசிக்கிறோம்.

2 நாளாகமம் 36 : 17

"ஆதலால் அவர் அவர்கள் மேல் கல்தேயரின் ராஜாவை வரப்பண்ணினார், அவன் அவர்கள் வாலிபரை அவர்களுடைய பரிசுத்தமான ஆலயத்திலே பட்டயத்தினால் கொன்று, வாலிபரையும் கன்னியாஸ்திரீகளையும் முதியோரையும் விருத்தாப்பிரியரையும் தப்பவிடவில்லை, எல்லாரையும் தேவன் அவன் கையில் ஒப்புக்கொடுத்தார்."

ஆம், இஸ்ரயேல் மற்றும் உலகத்தை ஆண்ட முதல் புறஜாதி இராஜா கல்தேயர் அல்லது பாபிலோனின் இராஜாவாகிய

நேபுகாத்நேச்சார் ஆவார்.

இது கிபி 606-ஆம் வருடம் நிகழ்ந்தது.

பின்பு பாபிலோனிய சாம்ராஜ்யத்தை தொடர்ந்து வேறு மூன்று புறஜாதி ராஜாக்கள் உட்பட இந்த நான்கு இராஜ்யங்களே இஸ்ரயேல் மற்றும் உலகத்தை ஆண்டுகொள்ளும் புறஜாதி சக்திகளாகும்.

மேலும், இதுவே லேவியராகமம் 26 ஆம் அதிகாரத்தில் குறிப்பிட்டுள்ள "ஏழத்தனையான" தண்டனையின் பொருளுமாகும்.

அந்த "புறஜாதி" இராஜ்யங்கள் மற்றும் அவை ஆளுகை செய்யும் காலம் பின்வருமாறு குறிக்கப்படுகிறது.

பாபிலோனிய (கல்தேய) சாம்ராஜ்யம்

கிமு 606 துவங்கி கிமு 538 வரை ஆண்டது.

மேதோ – பெர்சிய சாம்ராஜ்யம்

கிமு 538 -ல் துவங்கி கிமு 331 வரை ஆண்டது.

கிரேக்க சாம்ராஜ்யம்

கிமு 331 -ல் துவங்கி கிமு 160 வரை ஆண்டது.

ரோம சாம்ராஜ்யம்

கிமு 160 -ல் துவங்கி கிபி 476 வரை ஆண்டது.

இந்த கடைசியான ரோம சாம்ராஜ்யம் வினோதனாக விளக்கப்பட்டுள்ளது

தானியேல் 2 : 33 – **"அதின் கால்கள். இரும்பும், அதின் பாதங்கள் பாதி இரும்பும் பாதி களிமண்ணுமாயிருந்தது."**

இங்கு "இரும்பு" மற்றும் "களிமண்" கலந்திருக்கும் அடையாளமானது – ரோம சாம்ராஜ்யம் **கிபி 476க்கு** பின் எடுத்த வேற்று ரூபமாகிய, மதம் – அரசியல் கூட்டணியில் உண்டான

"பரிசுத்த ரோம சாம்ராஜ்யத்தை"

அடையாளப்படுத்துகிறது.

இது படிப்படியாக துவங்கி **போப் III லியோ – சார்லமேன்** ராஜாவை, (கிபி 800 –ம் வருடம்) ....சக்கரவர்த்திக்கும் மேலான தலைமை சக்தியாகிய....

போப்பிற்கு உட்பட்ட பிரான்ஸ் தேசத்தின் முதல் சக்கரவர்த்தியாக நியமித்த போது **முழு வல்லமையை பெற்றது.**

இந்த மகா வல்லமை **கிபி 1799** வரை பிரயோகிக்கப்பட்டது.

அப்பொழுது, அதே பிரான்ஸ் தேசத்திலிருந்து எழும்பிய **நெப்போலியன் போனபார்ட்** போப்பின் ஆளுகையை முடிவுக்கு கொண்டு வந்து, அப்போதைய போப்பாக இருந்த **போப் VI பையஸ்** – சை சிறையிலடைத்தார். அங்கு அவர் மரித்தார்.

இதன் மூலம் உலக வரலாற்றில் "இருண்ட யுகம்" என்றழைக்கப்பட்ட ஆளுகை முடிவுக்கு வந்தது.

நெப்போலியன் போனபார்ட்

பரிசுத்த ரோம சாம்ராஜ்யத்துக்கு உட்பட்ட பிரான்சின் கடைசி சக்கரவர்த்தியாக இருந்த 11 பிரான்ஸிஸ் அந்த பட்டத்தை கிபி 1806 ஆம் வருடம் துறந்தார்.



பின்பு "புறஜாதியாரின் ஆளுகை" முழு உலகத்தையும் காலனி ஆதிக்கத்தின் மூலம் தொடர்ந்ததை – **"...பத்து விரல்கள்..."** குறிக்கிறது.

இவை ஐரோப்பியாவின் தேசங்களாகும். இவை முன்பிருந்த பரிசுத்த ரோம சாம்ராஜ்யத்தின் பகுதியாக இருந்து, தற்போது "கிறிஸ்துவின் இராஜ்யம்" என்று பறைசாற்றுகின்றன.

இவர்களும், காலனி முறையில் முழு உலகத்தையும் ஆண்டனர்.

இந்த "புறஜாதியாரின் காலங்கள்" எப்பொழுது முடிவுக்கு வருகிறது ?

இதை பின்வருமாறு நாம் கணக்கிடலாம்.

2520 — 606 = 1914 A.D.

“ஏழத்தனை”யின் கால அளவு — கி.மு - வில் துவங்கி



ஆம், உண்மையில் 1914 ஆம் வருடம், ஆகஸ்ட் மாதமாகிய அதே வருடத்தில் புறஜாதியாரின் ஆளுகைக் காலம் முடிவு பெற்றது. இந்த முடிவு ஐரோப்பாவில் நடந்த முதலாம் உலகப் போர் குறித்தது.

இவ்விதமாக 1914 ஆம் வருடம் “புறஜாதியாரின் காலம்” முடிவடைந்தது.

இந்த "கால தீர்க்கதரிசனத்தின்" மூலம் "காலதீர்க்கதரிசனத்தை" புரிந்துகொள்வதற்கான வேறு சில திறவுகோல்களை நாம் கற்றுள்ளோம்.

திறவுகோல் – 3

திறவுகோல் – 3 அதாவது, ஒரு "தீர்க்கதரிசன மாதம்" என்பது 30 "தீர்க்கதரிசன நாட்களை" உள்ளடக்கிய காலமாகும்.

திறவுகோல் – 4

அதாவது, ஒரு "தீர்க்கதரிசன வருடம்" என்பது 360 "தீர்க்கதரிசன நாட்களை" உள்ளடக்கிய காலமாகும்.

திறவுகோல் – 5

அதாவது கால தீர்க்கதரிசனத்தில் பயன்படுத்தப்படும் "காலம்" என்ற வார்த்தை – 360 "தீர்க்கதரிசன நாட்களை" உள்ளடக்கிய ஒரு "தீர்க்கதரிசன வருடத்தை" குறிக்கிறது.

இது சொல்லர்த்தமான 360 வருடங்கள் கொண்ட காலப்பகுதிக்கு சமமாகும்.

ஆம், இன்று இந்த இரு "கால தீர்க்கதரிசனங்களை" ஆராய்ந்ததின் மூலம் "கால தீர்க்கதரிசனங்களை" புரிந்து கொள்வதற்கான சில முக்கியமான திறவுகோல்களை நாம் கண்டறிந்தோம்.

இது வேதத்தில் உள்ள முக்கியமான கால தீர்க்கதரிசனங்களை வரப்போகும் வகுப்புகளில் நாம் ஆராய்வதற்கு மிகப்பெரிய உதவியாக அமையும்.

...ஆமென்...

For Private Circulation Only



NOT FOR SALE

For more Subjects contact: MESSENGERS OF CHRIST E-mail: thekingdom1_6@yahoo.com